**செய்தி வெளியீடு எண்:018** **நாள்: 08.01.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உள அளவை சோதனைகள், போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள், வேலைவாய்ப்பு முகாம்கள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனைகள் வழங்குவது போன்ற சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், பார்வை திறனற்ற பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கு வாசித்தல் சேவை (Reading Sessions) துவங்கப்பட உள்ளது. இச்சேவையில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் இம்மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதே போன்று பார்வை திறனற்ற இம்மாணவ மாணவியருக்கு வாசிக்கும் சேவையை செய்ய விரும்பும் இளைஞர்கள் இம்மையத்தை தொடர்பு கொண்டு தங்களின் விவரங்களை பதிவு செய்திடுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் திரு.V.விஷ்ணு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

<u>முகவரி மற்றும் தொலைபேசி எண் :</u>

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
A28 , முதல் தளம், டான்சி கார்ப்பரேட் தலைமை அலுவலகம்,
கிண்டி, சென்னை – 32.
Ph No: 044 - 22500134

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**